RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s225

# தமிழ் மாது கோ ஸ்வப்பநேஸ்வரி அம்பாள்

பெ. விஜயகுமார் [அ, *]

[அ] தமிழ்த்துறை, முகமது சதக் கலை அறிவியல் கல்லூரி, சோழிங்கநல்லூர், சென்னை- 600100, தமிழ்நாடு, இந்தியா.

# Tamizh Maathu Ko Swappaneshwari Ambal

P. Vijayakumar [a, *]

[a] Department of Tamil, Mohamed Sathak College of Arts and Science, Sholinganallur, Chennai-600100, Tamil Nadu, India

* Corresponding Author: dr.vijay1285@gmail.com

Received: 22-03-2021
Revised: 15-01-2022
Accepted: 18-01-2022
Published: 28-02-2022

Check for updates

## ABSTRACT

Tamil Maadhu Swapneswari Ambal was a pioneer of feminism who had been doing various works for the advancement of women in the early twentieth century. He was the editor of Tamil Maadhu (1905). Thereby striving for the advancement of women. Born in 1846, he was heavily involved in the work of Iyothee Thass Pandit, a pioneer of the Buddhist renaissance. Pandit Rayapettai also attended the Sunday evening sermon at the Buddhist Association and delivered a sermon. He was presented with a section in the Tamil magazine 'Pengal Patthi' which was reserved for women. He wrote a series of short articles on a number of topics. After the demise of the Pandit, he converted to Buddhism and continued to practice Buddhism. Thus, he is identified by the Buddhists as 'Maha Upasaki'. She has run many organizations for the advancement of women, including the 'Women's Education Development Association' and the 'Widow Care Monastery' for widows. He put forward the idea that women who have lost their husbands should come forward to remarry without being paralyzed at home. He was keen to realize that women are enslaved by ignorance and to become rational thinkers. He protested against child marriages taking place at that time. He said that women in family life should not be dependent on others but should be meant to help others. Thus, she has been a voice for the advancement of women on many levels. Swapnaneswari Ambal. Today's Tamil world should know and praise her extensive social work and women's liberation work

**Keywords:** Tamilmaadhu, Tamilan Magazine, Iyothee Thass, Women's Liberation.

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குறிப்பாக 1905 இல் தமிழ் மாது எனும் பத்திரிகையை நடத்தி வந்தவர் கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாள். பெண்களின் முன்னேற்றத்தில், நல் வாழ்வில் பெரிதும் அக்கறை கொண்டவர். சர்வஜன சகோதரி எனும் பெயரால் அறியப்பட்ட இவர் அக்காலத்தில் அறிவார்ந்த மங்கையராக விளங்கினார். பலரால் நன்கு அறியப்பட்டயிவர் பெண்கள் கல்வியில் முன்னேறுவதற்கும் சமூகத்தில் நன்மதிப்பு உடையவராக மதிக்கப்படுவதற்கும் அருந்தொண்டாற்றினார்.

இவருடைய கட்டுரைகள் தமிழன் இதழில் பல பெயர்களில் காணப்படுகின்றன. கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாள், சி.எஸ். அம்பாள், சர்வஜன சகோதரி என்றும் தமிழ் மாது எனும் அவரது பத்திரிகை பெயராலும் இவரது சிறு சிறு தலைப்பிலான படைப்புகள் உள்ளன. பிற இதழ்களிலும் இவர் எழுதியிருப்பதாக அறிய முடிகின்றன. பூலோக வியாசன் இதழ் தொகுப்பு நூலில் அவர்கள் கோ.

ஸ்வப்பநேஸ்வரி அம்பாளின் ஒரு கட்டுரையைக் கொடுத்துள்ளார் (Balasubrahmanyam, 2018). அது 'இளவயதில் கலியாணம் செய்தல்' எனும் தலைப்பில் அமைந்த கட்டுரையாகும். எஸ்.எஸ். அம்பாள் பெயரில் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். 1917 களில் வந்த 'திராவிடன்' இதழில் பெண்கள் முன்னேற்றத்தை முன்வைத்து எஸ். எஸ். அம்பாள் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அதில் 'பெண் கல்வி' குறித்து 16.7.1917 எழுதிய கட்டுரையை இரா. பகுத்தறிவு தம் ஆய்வுக்காகப் பயன்படுத்தியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவருடைய எழுத்துக்களிலிருந்து இவர் செய்த பணிகளைத் தெளிவாக அனுமானிக்க முடிகிறது. ஆனால் இவரது வாழ்க்கைக் குறிப்புகள் பற்றியச் செய்திகளைத் துளியளவும் அறிந்துகொள்ள முடியவில்லை.

இவர் 1846 ஆம் ஆண்டு பிறந்து 1936 வரை 90 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார். உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை கொண்டவர் என்று அறியமுடிகிறது. பௌத்தத் துறவிகள் போல் ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டும் உணவு உண்டு நீண்ட ஆயுளைப் பெற்றிருக்கிறார்.

தமிழன் இதழில் இவரைப்பற்றி கிடைக்கின்ற செய்திகளைக் கொண்டு பார்க்கும்போது தென்னிந்திய சாக்கிய பௌத்த சங்க கூட்டத்தில் கலந்துக் கொள்பவராகவும் சொற் பொழிவு ஆற்றுபவராகவும் அறியமுடிகிறது. இவர் தென்னிந்திய சாக்கிய பௌத்த சங்கத்தில் நிகழ்த்திய சொற்பொழி பற்றியக் குறிப்பு உள்ளது.

1912 ம் வருடம் 3398வது புத்த ஜெயந்தி விழா இராயப்பேட்டை, தென்னிந்திய சாக்கிய பௌத்த சங்கத்தில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. ஏப்ரல் 29, 30 மற்றும் மே 1 ஆகிய மூன்று நாட்கள் புத்தர் பிறந்த நாள் உற்சவம் மிகச் சிறப்பாக ஆசிரமத்தில் நடைபெற்றது. மூன்றாம் நாள் நிகழ்வில் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. அதில் ஜி. அரங்கநாத முதலியார் B.A, பி. ஜீவரத்தின முதலியார், மாங்போஸோ பர்மா நாட்டைச் சார்ந்தவர், இவர்களுடன் ஸ்ரீமதி ஸ்வப்பநேஸ்வரி அம்பாளும் சொற்பொழிவு நிகழ்த்தி உள்ளார். இதில் அயோத்திதாச பண்டிதரும் சொற்பொழிவு நிகழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

இவர் பௌத்தர் என்பதற்கான தரவுகள் எதுவும் தமிழன் இதழில் அறிந்தவரை கிடைக்கவில்லை. சில இடங்களில் பௌத்தத்தைத் தொட்டும் பண்டிதரின் பணிகளை உயர்த்தியும் எழுதி உள்ளார். இக்காலத்தில் இவர் பௌத்தத்தை மெல்ல மெல்ல உள்வாங்கத் தொடங்கினார் என்று புரிந்துக்கொள்ள முடிகிறது. இவரது கட்டுரைகளில் கூட 'இந்து சகோதரிகளே' என்று குறிப்பிட்டு எழுதுவதைக் காணமுடிகின்றன. இப்போக்கு அவர் கடைசியாகத் தமிழன் இதழில் எழுதிய 'பால்ய விவாகத்தால் விளையும் கேடுகள்' - (நவம்பர் 1913) வரையிலும் உள்ளது. அப்பொழுது இவர் முழுமையாக பௌத்தத்திற்குள் வரவில்லை என்று தெளிவாகிறது. பகுத்தறிவு பின்புலத்தில் பெண்விடுதலையில் அக்கறைக்கொண்ட முற்போக்குச் சிந்தனையாளராகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு செயல்பட்டுள்ளார்.

பின்னாளில் இவர் பௌத்தராக மாறியுள்ளார். பண்டிதரின் செயல்பாடுகளால் பலர் பௌத்த மதத்தைத் தழுவினர். பூலோகவியாசன் இதழின் ஆசிரியர் பூஞ்சோலை முத்துவீரன் பிள்ளை 1910 இல் பௌத்தம் தழுவினார் (Balasubrahmanyam, 2018). அதுபோலவே கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாளும் பௌத்த மதம் மாறியுள்ளார். இதனை 'பௌத்த சடங்குமுறைகள்' எனும் நூலின் பின்பகுதியில் குறிப்பிடுகிறார் (Jeenaraju, 1990). அதில் பௌத்தம் வளர்த்த பெரியோர்கள் பற்றியக் குறிப்புகளைக் கொடுக்கிறார். (இவர் பிற்காலத்தில் தென்னிந்திய சாக்கிய பௌத்த சங்கத்தின் இணைச் செயலாளராகவும் பொதுச்செயலாளராகவும் விளங்கியவர்.) அதில் பத்தாவதாக கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்மாள் பற்றிய தகவல் அமைந்துள்ளது. இத்தகவலே அவரைப் பற்றி அறிந்து கொள்வதற்குப் பெரும் ஆதாரமாக உள்ளது. அதன்படி கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாளை 'மகா உபாசகி' என்று பதிவுச் செய்துள்ளார். பௌத்தச் சமயத்தில் இருந்து பௌத்தப் பணியாற்றுபவர்களை உபாசகர் என்பது வழக்கம். இவரை 'மகா உபாசகி' என்று குறிப்பிடுகிறார். உபாசகி எனும் சொல் பௌத்தம் ஆணுக்கு நிகராகப் பெண்ணையும் சமத்துவ உணர்வோடு பாவித்ததற்குத் தக்க சான்றாக அமைகிறது. உபாசகர் - உபாசகி, பிக்கு - பிக்குணி, தேரர் - தேரி போன்றவை இருபாலர் சமத்துவத்தைக் காக்கும் சொற்களாகும்.

இவர் திருமணம் செய்து கொள்ளாமல் பிரம்மச்சாரியாக வாழ்ந்து தர்ம ஊழியங்கள் செய்துள்ளார். மேலும் இவரை 'அனகாரிக' என்றும் 'பௌத்த சொற்பொழிவாளர்' என்றும் குறிப்பிட்டுள்ளார். (Jeenaraju, 1990)

இவர் முழுமையான பௌத்தராக விளங்கினார் என்பதற்கு மேற்குறித்த பதிவுகள் போதுமானதாகும் (Jeenaraju, 1990). இக்குறிப்புகள் கூட மிகப் பிற்காலத்தில் பதிவுசெய்யப்பட்டது. அதாவது 1990க்குப் பிறகானது. கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாள், அயோத்திதாச பண்டிதரின் மறைவுக்குப் பிறகு நீண்ட காலம் சமூகப் பணியில் ஈடுபட்டிருந்தார். பெண்கல்வி, பகுத்தறிவு, பௌத்தம் என இவரது பணிகள் தொடர்ந்து நீண்டிருந்தது. 1920 இல் 'தென்னிந்திய பௌத்த மஹாஜன கூட்டம்' நவம்பர் 21, 22 ஆகிய இரண்டு நாட்கள் பெங்களூரில் நடைபெற்றது. அதில் M.Y முருகேசம், P. லட்சுமி நரசு, G. அப்பாதுரையார், A.P. பெரியசாமி புலவர், கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாள், சி. மாணிக்கம், N. ஐயாக்கண்ணு புலவர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். முதல் நாள் ஆலோசனைக் கூட்டமாகவும் இரண்டாவது நாள் சொற்பொழிவு நிகழ்ச்சியுமாக அமைந்திருந்தது. இரண்டாவது நாளில் பௌத்த ஆளுமைகள் பலரும் சொற்பொழிவு நிகழ்த்தினர். அதில் ' இந்தியாவின் புராதன தன்மம்' எனும் தலைப்பில் கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாள் உரை நிகழ்த்தியுள்ளார். இவர் முழு பௌத்தராகவும் பௌத்த செயல்பாடுகளில் பங்கெடுத்துக் கொள்ள கூடிய ஆளுமையாகவும் இருந்துள்ளார்.

## தமிழ்மாது

இவர் தன்னுடைய சிந்தனைகளை மக்களிடத்தில் கொண்டுபோய் சேர்ப்பதற்குத் தொடங்கிய பத்திரிகைதான் தமிழ் மாது. இது 1905 இல் வெளிவந்தது. ஆனால் சிலர் 1906, 1907 என்று குறிப்பிட்டுள்ளனர். 24 பக்கங்களைக் கொண்ட மாத இதழாகக் கோமளீஸ்வரன் பேட்டையிலிருந்து வெளிவந்துள்ளது. 1907 டிசம்பர் மாதம் வந்த அறிவிப்பின்படி தமிழ் மாது பத்திரிகை 'சுதேச போஷினி' எனும் பெயரில் மாதம் இரு முறையாக வெளிவரும் என்று பொ. ராஜா, 'ஸ்வப்பநேஸ்வரி நடத்திய தமிழ் மாது' எனும் தலைப்பில் அமைந்த காலச்சுவடு இதழ் கட்டுரையில் (19 நவம்பர் 2015) குறிப்பிடப்பட்டுள்ளார். பிற்காலத்தில் குறிப்பாக ஆயிரத்தி தொள்ளாயிரத்தி இருபதுகளில் கூட தமிழ் மாது பத்திராதிபர் என்றே அறியப்பட்டிருந்தார். தமிழ் மாது எனும் பெயரே இவருக்கு நீடித்த புகழைக் கொடுத்துள்ளது. பத்திரிகையின் பெயர் மாற்றம் பற்றிய குறிப்பு இருந்தாலும் அப்பெயரில் பத்திரிகை வெளி வந்ததா அவருக்கு புகழைத் தந்ததா என்பது பற்றி அறிந்து கொள்ள முடியவில்லை.

தமிழ் மாது பத்திரிகையின் மூலமாகவும் ஒரு பைசாத்தமிழன் உள்ளிட்ட பிற பத்திரிகைகளின் மூலமாகவும் சொற்பொழிவுகளின் வாயிலாகவும் நற்கருத்துகளை விதைத்து வந்தார். பெண்களின் கல்வியை விருத்தி செய்யும் பொருட்டு ஜஸ்டிஸ் ஸி. சங்கரநாயர் அவர்களின் இல்லத்திலும் மயிலாப்பூர் ஸ்ரீமத் கனகம்மாள் அவர்களின் இல்லத்திலும் வாரம் ஒருமுறை சென்னை மாதர்கள் ஒன்றுகூடி பெண்களின் கல்வியை விருத்தி செய்ய முயற்சித்து வந்தனர். பெண் கல்வி விருத்தி சங்க கூடுகைக்கென்று கோமளீஸ்வரன் பேட்டையில் சிறிய கட்டிடம் ஒன்றையும் கட்டி வந்தார் என்ற குறிப்பும் கிடைக்கிறது. இதோடு தொடர்புடைய மற்றொரு செய்தியும் உள்ளது. 22 பிப்ரவரி 1911 தமிழனில் ஒரு விளம்பரம் வந்துள்ளது. அந்த விளம்பரத்தை கொடுத்தவர் கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாள் ஆவார்.

'சென்னை கோமளபுரம், காஞ்சிபுரம் பச்சையப்ப முதலி வீதி, 1வது நெ. கிருகத்தில் பெண் கல்வி விருத்தி சங்கம் (சன்மார்க்க புத்தக சங்கம்) என்பதை 1911 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 20ம் தேதி ஸ்தாபனம் செய்யப்பட்டிருக்கின்றபடியால் இதில் சேர விரும்பும் சர்வஜன சகோதரிகளும் சேரலாம்.' என்று விளம்பரம் கொடுத்துள்ளார் (Vijayakumar, 2021).

விதவைகளுக்கு என்று மடம் ஒன்றையும் நடத்தியுள்ளார். அது 'விதவா பரிபாலன மடம்' எனும் பெயருடையது. இதனுடைய மேனேஜராக கோ. ஸ்வப்பநேஸ்வரி விளங்கினார்.

தென்னிந்தியாவில் பெண்களுக்கென்று கன்னிகா மடமும் அனாதைகளுக்கு அன்ன சாலைகளும் ஏற்படுத்த வேண்டுமென்பது இவரது நெடுநாள் ஆசையாக இருந்தது. இதனை அவ்வப்பொழுது பேச்சுக்களிலும் பத்திரிகைகளிலும் வெளிப்படுத்தினார். பெரும்பாலான மக்கள் பழமையைப் பேணும் காலத்தில் முற்போக்குச் சிந்தனை உடையவராகத் திகழ்ந்தார். கணவனை இழந்தப் பெண்கள் திருமணம் செய்து கொள்ளாமல் சமூகத்திற்குப் பயந்து இளமையை வீட்டிலேயே கழித்து வந்தனர். இப்படிப்பட்ட பெண்கள் மறுமணம் செய்து கொள்ள வேண்டுமென்பது கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாளின் எண்ணமாக இருந்தது.

## கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாள் - அயோத்திதாச பண்டிதர் தொடர்பு

இருவரும் சமகாலத்தவர்கள். பண்டிதரை விட கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாள் ஒரு வயது இளையவர். பண்டிதர் தமிழன் எனும் வார இதழை நடத்திவந்தார். கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாள் தமிழ் மாது எனும் மாத இதழை நடத்தி வந்தார். இருவரும் தமிழ் உணர்வு மிக்கவர்கள் என்பதை இவர்கள் இதழுக்குச் சூட்டியுள்ள பெயரே வெளிப்படுத்துகிறது. இவர்கள் சமூக மாற்றத்தை நோக்கி பயணித்தவர்கள்.

பண்டிதரின் மீது பெரும் மதிப்புக் கொண்டு தென்னிந்திய சாக்கிய பௌத்த சங்கத்தின் செயல்பாடுகளில் தன்னை இணைத்துக் கொண்டார். பண்டிதரின் தலைமையில் நடைபெறும் பௌத்த சங்க கூட்டத்தில் கலந்துகொண்டு பௌத்த கருத்தியல்களை உள்வாங்கி அதனை அவ்வப்போது வெளிப்படுத்தினார். பௌத்த சங்கத்திற்கும் அர்ப்பணிப்போடு பணியாற்றுகின்ற பண்டிதருக்கும் ஆதரவாக இருக்கும்படி சங்கத்தவர்களைக் கேட்டுக்கொண்டார்.

இராயப்பேட்டை பௌத்த சங்கத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் பெரும்பாலும் ஆடவர்களே கலந்து கொள்வது வழக்கமாய் இருந்தது. இதனைக் கவனித்த அம்பாள் சங்க நிகழ்வுகளில் பெண்களுடைய பங்களிப்பு மிகக் குறைவாக இருப்பதைக் கருத்தில் கொண்டு தங்களுடைய குடும்பத்தைச் சார்ந்த பெண்கள் குறிப்பாக மனைவி, மகள், தாய், சகோதரி, உறவுக்காரப் பெண்கள் உள்ளிட்டவர்களைச் சங்கத்தில் நடைபெறும் நிகழ்ச்சிக்கு அழைத்து வர வேண்டுமென கேட்டுக் கொண்டார். இதன் மூலம் நல்ல உபதேசங்களையும் கருத்தியல்களையும் கேட்டுத் தெளிவு பெறுவதுடன் பெண்களிடம் பௌத்தம் நிலைபெறும். இதனைச் சங்க உறுப்பினர்கள் எவ்விதமான சாக்கு போக்கும் சொல்லாமல் பெண்களை அழைத்து வருவதற்கு முன்வர வேண்டும் என்றார்.

இவர் பண்டிதரின் பௌத்தப் பணியையும் தமிழன் இதழையும் ஆதரித்து எழுதியுள்ளார். புத்தர் பற்றிப் பண்டிதராற்றும் போதனைகளைக் கேட்டு குரு பக்தி கொண்டவர். இவருக்காகவே தமிழன் இதழில் பெண்கள் பத்தி (LADIES COLUMN) எனும் பகுதி பண்டிதரால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இப்பகுதியில் பெண்களுக்குரிய செய்திகள் மட்டும் இடம் பெற்றன. பெண்கள் பத்தியில் காணப்படுகின்ற பெரும்பாலான செய்திகள் கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாள் எழுதியவையாகவே உள்ளன. கிட்டத்தட்ட முப்பதுக்கும் மேற்பட்ட தலைப்புக்களில் இவருடைய எழுத்துக்கள் கிடைக்கின்றன. அவை பெண் கல்வி, பெண்களுக்கு அறிவுரை கூறும் படியாகவும் அமைந்துள்ளன. ஒவ்வொரு தலைப்பிலும் பெண்களை விளித்துச் செய்திகள் கூறும்படி கட்டுரைகள் அமைந்துள்ளன.

## பகுத்தறிவும் பௌத்தமும்

தென்னிந்திய சாக்கிய பௌத்த சங்கத்தோடு கொண்ட தொடர்பினால் பௌத்த சிந்தனையை உள்வாங்கி இருந்தார். இதனை அவருடைய எழுத்துக்களிலும் காண முடியும். சில இடங்களில் பௌத்த

மதத்தின் கருத்துகளை உயர்வாக எடுத்துக் கூறி விளக்கிச் செல்கிறார்.

"இந்து மத குருக்களும் மகமதிய குருக்களும் மற்றுமுள்ள குருக்கள் மாரும் மனிதர் வயிற்றில் பிறந்த மனிதர்களேயன்றி அந்தரத்தில் பிறந்து ஆகாயத்தி லுலாவி பரமாகாயத்துட் கலந்த பரங்களல்ல. அப்படியே நாம் நலமாக இப்போது அனுஷ்டித்து வரும் பௌத்தாசாரியரும், மனிதர் வயிற்றில் பிறந்த

மனிதரே என்றாலும் அவர் ஏனைய மத குருக்களைப் போல தற்பெருமெ பாராட்டாமலும், வேஷத்தினால் அல்லது வீண் டம்பத்தினால் அல்லது அச்சத்தினால் போதியாமல் உண்மெய் நெறியுடன் உலகுய்யும்படி சத்திய தருமத்தை அனுஷ்டிக்க தீமெயை விடுங்கள் நன்மெய் கடைப்பிடியுங்கள் என்று போதித்து வந்தார்." இவ்வாறு தன் எழுத்துக்களில் பௌத்தத்தை மிக உயர்வாக மதித்துப் போற்றியுள்ளார் (Vijayakumar, 2021).

கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாள் சிறந்த பகுத்தறிவாளர் என்பதற்கு அவரது எழுத்துக்களே சான்றாக விளங்குகின்றன. கடவுள் பக்தி உடையோர் சன்மார்க்க நெறியில் நடக்க இயலும் என்பது ஆபாசமான வார்த்தை என்றார். அவர் பெண்களிடத்தில் எதற்கு ஆசைப்பட வேண்டும். எதற்கு ஆசைப்படக்கூடாது என்பதை மிக அழகாகத் தெளிவுபடுத்தியுள்ளார். நம் தேசத்தில் கோயில்களும் மடங்களும் அதிகமாகத் தோன்றி திருப்பணிகள் செய்வதற்கும் பழுது பார்ப்பதற்கும் இயலாமல் உள்ள நிலையில் பெண்கள் கோயில் கட்டுவதற்கு ஆசைப்படுவது பயனற்றது. இது அவர்களின் போலி பக்தியையும் வீண் பெருமையையும் காட்டுகிறது. இதை விடுத்து ஏழைகளுக்கு என்று தரும போஷண சாலை, அறநெறிப் போதக சாலை, விதவா பரிபாலன மடம், சாஸ்திர போதக சாலை, தரும வைத்தியசாலை இவைகளுக்காகச் செலவு செய்வது பயனுடையது என்று மிகச்சரியாகக் குறிப்பிட்டுள்ளார். பயனற்ற விஷயங்களுக்காக ஆசைப்படுவதைக் காட்டிலும் பயனுடைய விஷயங்களுக்காக ஆசைப்படுவதே சிறப்புடையது என்பதைத் தெளிவாக உணர்த்தி உள்ளார் (Vijayakumar, 2021).

இன்றும் இந்தச் சிந்தனையைப் பொருத்திப் பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது. கோடிகளைக் கொண்டுபோய் கோயில் உண்டியலில் கொட்டுகின்ற இந்தத் தேசத்தில்தான் ஒருவேளை உணவுக்கும் வழியில்லாமல் கையேந்துகின்ற மக்களும் வாழ்கின்றனர் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். அதிக சொத்துடைய விதவைப்பெண்களிடம் சென்று போலியாக பக்தியைக் கூறி அவர்களின் சொத்துக்களைக் கோயில் பணிகளுக்காகச் செலவிட செய்வதைப் பண்டிதரும் குறிப்பிட்டுள்ளது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

சாதி இந்துக்களின் வீடுகளில் சென்று தாகத்திற்குச் சிறிது தண்ணீர் கேட்டாலும் தீட்டாகிவிடும் என்று தர மாட்டார்கள், சுப நிகழ்வுகளின் போதும் விரத நேரங்களின் போதும் பிறருக்கு அன்னம் இடுவார்கள். ஆச்சாரம் என்றும் தீட்டு என்றும் சொல்லி கடைபிடித்து வரும் சாதி இந்துக்களின் பழக்க வழக்கங்கள் மக்களுக்கு தீங்கு விளைவிப்பதாகக் கருதி அதனைத் தன் எழுத்துக்களில் வெளிப்படுத்தி வந்தார்.

பக்தி என்பது அசத்துடன் கூடிய அன்பு என்கிறார். கடவுள் மீது அதீத பக்தி கொண்டவர்கள் தாங்கள் எத்தனைப் பெரிய தவறுகளைச் செய்தாலும் அதைக் கடவுள் மன்னிப்பார் எனும் நோக்கத்தில் மேலும் பல குற்றங்களைச் செய்வதாகவும் தவறான செய்கைகளில் ஈடுபடுவதாகவும் குறிப்பிடுகிறார். இதெல்லாம் அக்காலத்தில் அவர் கண்டு உணர்ந்தவை என்று அறியலாம்.

வளரும்போதே பெண் குழந்தைகளுக்குப் பகுத்தறிவு சிந்தனையை ஊட்டி வளர்க்க வேண்டும் என்று கூறுகிறார். "ஆதியங்கடவுளை உண்மெயான பத்தியுடன் மனதினால் துதி செய்வதுவே போதுமானாவ வீண் டம்பத்திற்கு கோயில்களுக்குப் போவதும், அடி தண்டம், அங்கப்பிரகரணம், மணவிளக்கு வைத்தல், வேப்பம் சீலைக் கொடுதல் இத்தகைய பிரார்த்தனைகள் செலுத்துவதையும் உபவாசங்க ளிருப்பதையும் ஒழித்தல் வேண்டுமென்றுங் கற்பித்தல் வேண்டும். இது பெண்களுக்கு அன்னை செய்யும் பேருதவி" (Vijayakumar, 2021) என்று பகுத்தறிவுச் சிந்தனையை மக்களிடையே வளர்த்தார்.

## கல்வி

இந்திய சமூகத்தில் அனைவருக்குமான கல்வி என்பது மிகப் பிற்காலத்தில் உருவானது. சமூகத்தில் பின்தங்கிய நிலையில் இருப்பவர்களும் பெண்களும் பன்னெடுங் காலமாக கல்வி

மறுக்கப்பட்டு வந்தனர். ஆங்கிலேயரின் வருகைக்குப் பின்னர் ஏற்பட்ட சமூக மாற்றங்களினால் மெல்ல மெல்ல கல்விக் கற்கும் சூழல் அனைவருக்கும் கிடைத்தது.

சமூகத்தில் எல்லா நிலைகளிலும் எல்லா இடங்களிலும் உழைப்பைச் செலுத்துகின்ற பெண்கள் கல்வியறிவு பெறாமல் நெடுங்காலம் அடுத்தவரைச் சார்ந்து வாழ வேண்டிய சூழலில் தள்ளப்பட்டனர். தமிழ்ச் சமூகம் மிக எளிதாக பெண் கல்வியை மறுத்து வந்தது. பெண்களின் வாழ்வியலை நன்குணர்ந்த கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாள், பெண்கள் அவசியம் கல்வி கற்க வேண்டும் என்றார்.

ஒரு ஆண் எப்படி கல்வி கற்க வேண்டியது அவசியமோ அதேபோல் பெண்களும் கல்வி கற்க வேண்டியது அவசியம். இருபாலருக்குமானக் கல்வியானது அவசியம் என்று பத்திரிகையில் எழுதினார். இவருடைய வார்த்தைகளில் குறிப்பிட வேண்டுமென்றால் கல்வி அத்தியாவசியம், கடமை, விலகாக் கடமை எனும் சொற்றொடர்களின் மூலமாகக் கல்வியின் அவசியத்தை உணர்த்தி வந்தார்.

பழங்காலத்தில் கல்வியில் சிறந்து விளங்கியவர்கள் பெண்கள். இடைக்காலத்தில் ஏற்பட்ட சமூக மாற்றத்தினால் இழி நிலைக்குத் தள்ளப்பட்டனர். மீண்டும் பெண்கள் கல்வி கற்று பிறர் மதிக்கும் படியாக உயர்ந்து விளங்க வேண்டும் என்பது கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாளின் விருப்பம்.

பெண் குழந்தைகள் இல்லாத பெற்றோர்கள் சிலர் பெண் கல்வியைப் பற்றியும் பெண்களின் முன்னேற்றம் பற்றியும் பெண்களுக்கான கல்வி சாலைகள் ஏற்படுத்துவது பற்றியும் சிறிதும் பொருட்படுத்துவது இல்லை. அதேபோன்று கணவனோடு வாழ்கின்ற பெண்கள் விதவையான பெண்களின் நிலையைப் பற்றிச் சிறிதும் உணர்வதில்லை. விதவைப் பெண்கள் மறுமணம் செய்துகொண்டாலும் மறுமணம் செய்து கொள்வதைப் பற்றிப் பேசினாலும் அவர்களோடு பகை கொள்வதும் புறம் பேசுவதுமாகப் பெண்கள் இருப்பதை எண்ணி வருந்தினார். இப்பெண்களின் மனநிலையை மாற்றி நற்பண்பு உடையவர்களாகவும் நற்சிந்தனை கொண்டவர்களாகவும் விளங்க வேண்டும் என்பதற்காக பெண் கல்வி மற்றும் பெண்களின் முன்னேற்றத்தை எடுத்துக் கூறி வந்தார். அவற்றைப் பெண்களுக்குப் புரியும் விதத்தில் கூறியதில்தான் இவரது தனித்துவமே அடங்கியுள்ளது. பெண்களுக்கு அழகைத் தருவதும் சிறப்பைத் தருவதும் இம்மை பயன்களைத் தருவதுமாக இருக்கின்ற அணிகலம், மூன்றெழுத்துக் கொண்டது. செல்வந்தர் வீட்டுப் பெண்களும் அணியாமல் இருப்பது. ஏழை பணக்காரர்கள் இருவரும் அணியக் கூடியது. அது கல்வி என்று விவரிக்கிறார்.

## கணவனின் கடமை

ஒரு ஆண் தன் மனைவியைக் கல்வியில் தேறச் செய்வது அவனது கடமையாகும். சுகமும் கௌரவமும் மேலான நித்யானந்தமும் கிடைக்க வேண்டுமெனில் தங்கள் மனைவிகளைக் கல்வியில் தேர்ந்தவர்களாகச் செய்ய வேண்டும். இது ஒவ்வொரு கணவனின் கடமை என்றார்.

பெண்கள் கல்வி கற்று பெரும் பதவிகளில் அமர்ந்து ஆண்களுக்கு நிகராக வாழ வேண்டும் என்பதற்காக அவர் பெண் கல்வியை ஊக்குவித்தார் என்பதற்கான குறிப்பு தமிழன் இதழில் எவ்விடத்திலும் இல்லை. அடிப்படையில் பெண்கள் கல்விக் கற்று தங்களுடைய குடும்பத்தில் எவ்விதமான சிக்கல்களும் ஏற்படாத வண்ணம் நடத்திச் செல்ல வேண்டும் என்பதே பெண் கல்விக்கான அவசியமாக உணர்ந்தார். குடும்பத்தைத் தாண்டி ஏன் அவர் பெண் உரிமைகளை மீட்டெடுப்பதற்கான, பெண்களின் வளர்ச்சிக்கான குரலை எழுப்பவில்லை என்ற ஐயம் இயல்பாகவே எழுகிறது. பெண்களின் வளர்ச்சி என்பது அக்காலத்தில் மிக ஆரம்ப நிலையில் இருந்தது. கல்வி கொடுப்பதால் மற்ற எல்லா வகையான வளர்ச்சிகளையும் மாற்றங்களையும் பெறமுடியும் என்பது தெளிவானச் சிந்தனை. எனவே குடும்பத்தில் இருந்து அவர்களின் முன்னேற்றம் படிப்படியாகத் தொடங்க வேண்டும் என்று எண்ணியதாகத்தான் தோன்றுகிறது.

அதுமட்டுமல்லாமல் பெண்கள் தங்களுடைய குடும்ப வாழ்க்கையை அழகான முறையில் நடத்தி செல்ல வேண்டும் என்றால் அதற்குக் கல்வி அவசியம். தன் கணவன், கணவனைச் சார்ந்து இருக்கக்கூடிய குடும்ப உறவுகள் இவர்களை அனுசரித்து சிறந்த முறையில் ஒரு குடும்பத்தை நடத்திச்

செல்வதற்குக் கல்வி முக்கியத்துவம் வாய்ந்தது. எனவே பெண்கள் அவசியமாகக் கல்வி கற்க வேண்டும் என்று உணர்த்தினார்.

## முடிவுரை

பெண்கள் முன்னேற்றத்திற்கு கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாள் எடுத்த முயற்சிகள் பாராட்டுக்குரியது. பெண்களின் நலனைக் கருத்தில் கொண்டு தொலைநோக்குப் பார்வையோடு சிந்தித்துள்ளார். பெண் கல்வியிலும் பெண்கள் பாதுகாப்பிலும் அதிகம் கவனம் செலுத்தி உள்ளதை அவரது எழுத்துக்களில் இருந்து அறிந்து கொள்ள முடிகிறது. பெண்கள் கல்வி கற்று பொருள் சம்பாதிக்கும் திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு இருந்தால் பெண்களால் பிறருக்கு உதவி செய்ய முடியும் என்கிறார். பிறருடைய உதவியால் வாழ்ந்து வரும் பெண்கள் பிறருக்கு உதவி செய்யும் வகையில் மாறவேண்டும் என அக்காலத்தில் பெண்களுக்கு எடுத்துச் சொல்லியது பெண்களின் மதிப்பைச் சமூகத்தில் உயர்த்தும் நோக்கில் அமைந்துள்ளது. இவரது பெரும்பாலான எழுத்துக்களில் பெண்களுக்கு அறிவுரை சொல்லும் போக்கே காணமுடிகின்றன. சில இடங்களில் பெண்களைக் கௌரவப்படுத்தும் விதமாக 'இல்லரசி' என்று புகழ்ந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அயோத்திதாச பண்டிதரின் சமகாலத்தில் வாழ்ந்த பெண் ஆளுமை, பெண்களின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்திய கோ. ஸ்வப்பநேஸ்வரி அம்பாளின் கருத்துகள் இன்றைய நவீன கால சமூகத்திற்கும் சென்றடைய வேண்டியது அவசியமாகும்.

## References

Balasubrahmanyam, J., (2018) Poolokaviyaasan Talith Ithazh Thoguppu, Kalachuvadu Publications, Nagercoil, India.

Jeenaraju, N., (1990) Boutha sadangu muraikal, Thenninthiya Boutha Sanga Veliyidu, Chennai, India.

Vijayakumar, P., (2021) Iyothee Thass Panditharin Penniya Viduthalai Sinthanaigal, Babasaheb Ambedkar Literary Society, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License